# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு I

பகுதி 2

Kerala Reader - Tamil
Standard I
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2024

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன், அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 1

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

மக்களின் வாழ்க்கை முறைகளும் வாழ்க்கைச் சூழல்களும் காலந்தோறும் மாறும் தன்மையன. அறிவியல் மாற்றம், தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி உலகையே புரட்டிப் போட்டுவிட்டது என்று சொல்லலாம். எல்லா நிலைகளிலும் மாற்றங்கள். கற்றல் – கற்பித்தல் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.கற்றல் என்பது கிடைக்கின்ற அறிவையெல்லாம் சேகரித்து வைப்பது அல்ல. கற்ற கல்வி தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. சூழல்களையும் சவால்களையும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு தக்கபடியான பாடங்களைத் தேர்ந்தெடுப்பதும் ஒரு சவால்தான். தேர்ந்தெடுத்த பாடங்களை வகுப்பிற்குத் தகுந்தவாறு அறிமுகம் செய்வதிலும் மிகுந்த கவனம் தேவைப்படுகிறது.

ஆரம்ப வகுப்புகளைப் பொறுத்தவரையில் படங்களுக்கும் பாடங்களைப் போலவே முக்கிய பங்கு உண்டு. பாடம் பாதி, படம் பாதி! கற்பித்தல் என்பது ஒரு பக்கத்திலிருந்து நிகழ வேண்டிய ஒன்றல்ல. கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிகழும் ஒரு கலந்துரையாடலைத் தான் இப்போது கற்றல் என்கிறோம். கற்போரின் மூளைக்குள் அறிவைத் திணித்தல் என்பதற்கு மாறாக அவர்கள் தாமாக சிந்தித்து அறிவை வளர்த்துக் கொள்வதற்கான துண்டுகோலாகவும் கற்றல் முறை அமைய வேண்டும்.

ஒன்றாம் வகுப்பு என்பதால் மொழி, கணிதம், சுற்றுச்சூழல் கல்வி மூன்றையும் ஒருங்கிணைத்து வழங்க வேண்டிய ஒரு கட்டாயமும் உள்ளது. பாடங்களைப் பரிமாற்றம் செய்வதில் ஆசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

படியுங்கள்! பயன்பெறுங்கள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Committee

## Tamil - I (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Srinivasan, S.P.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Expert

**Dharmesh Fernandez**
Professor cum Deputy Director of CIIL, Mysuru.

### Members

**Alli Pathumma, K.,** HSST (Tamil), GHSS, Kumily, Idukki.
**Babu, S.,** (Rtd.) H.M., GLPS, Devikulam, Idukki.
**Heleena, K.,** LPST, GTHS, Vanchivayal, Idukki.
**Jonny Mon, R.R.,** LPST, LMS Tamil HS, Parassala,Thiruvananthanpuram.
**Krishnamoorthy, M.,** BPC, Chittur BRC, Palakkad.
**Muniyandi,** (Rtd.) PD Teacher, TCNMGHSS, Nedumpara, Kollam.
**Sofia Stephen,** LPST, GLPS, Glenmery, Idukki.
**Aparna Giri, R.,** Chackai, Thiruvananthapuram.
**Arya S Rajeev.,** Kariyam, Poudikonam, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nilovna, Pakaloor, Thiruvananthapuram.

### Academic Co - Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்

பக்கம்

**6. வீடும் கூடும்**

நல்லதொரு குடும்பம் ........ 88

வீடு எங்கே? ........ 92

விலங்கியல் பூங்காவில் ........ 96

**7. நிலவைக் காணவில்லை**

கடற்கரைச் சுற்றுலா ........ 102

நிலாச் சோறு ........ 106

பௌர்ணமி இரவு ........ 110

**8. வானவில்லின் விந்தை**

வா மழையே வா ........ 116

வானவில் சிரித்தது ........ 120

ஆடைகள் பலவிதம் ........ 124

**9. மண்வாசனை**

களத்து மேட்டிலே ........ 130

வாழ்த்துவோம் வணங்குவோம் ........ 134

நாட்டின் சொத்து ........ 138

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## என்னைப்பற்றி ..............

பெயர் : ...........................................................

அம்மா பெயர் : ............................................................

அப்பா பெயர் : ............................................................

குடும்ப உறுப்பினர்கள்

.........................  .........................  .........................

அலகு – 6

# வீடும் கூடும்

## நல்லதொரு குடும்பம்

இரவு தாமதமாகப் படுத்ததால் கமலா நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். வழக்கமாக அதிகாலையில் எழுந்திருக்கும் அவள் அன்று எழவில்லை.



கமலா எழுந்திரு....
பள்ளி செல்ல நேரமாகிவிட்டது அம்மா அன்போடு அழைத்தார்.
கமலா எழுந்து குளிக்கச் சென்றாள்.
அப்பா சீருடையைத் தேய்த்துக் கொடுத்தார்.
கமலாவின் பாட்டி அவளுக்குத் தலை வாரினார்.
சித்தி பூச்சூடித் தந்தார். அத்தை உணவை ஊட்டினார்.
அண்ணன் பள்ளிப் பையை எடுத்துக் கொடுத்தான்.
அக்கா செல்லமாக முத்தமிட்டாள்.
கமலா, மாமாவின் வண்டியில் ஏறினாள்.
பள்ளிக்குப் புறப்பட்டாள்.
கமலாவின் குடும்பம் அன்பான குடும்பம்.



## எழுதுங்கள்.

❖ கமலாவின் வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் யார்? யார்? எழுதுங்கள்.

## உதவியவர்கள் யார்? யார்?

❖ கமலாவிற்கு உதவியவர்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.

- சித்தி .............................. .
- .............................. தலைவாரிக் கொடுத்தார்.
- அத்தை .............................. .
- .............................. சீருடையைத் தேய்த்துக் கொடுத்தார்.
- அண்ணன் .............................. .

## நான் செய்யும் வேலைகள்.

❖ நீங்கள் வீட்டில் செய்யும் வேலைகளுக்கு (✓) அடையாளம் இடுங்கள்.













## வரைவோம்; வண்ணம் தீட்டுவோம்.

எனது வீடு

## பாடலை நிறைவு செய்வோம்.

சிறிய நல்ல வீடு

சிறந்த ............ .............

நான் வரைந்த வீடு

என் சொந்த .............

அன்பைத் தருவார் என் அம்மா

அனைத்தும் ................. . ......... ...............

பாட்டி சொல்லும் .......................

கேட்டு நானும் மகிழ்வேன்.

## வீடு எங்கே?

பள்ளியிலிருந்து விலங்கியல் பூங்காவுக்குச் சுற்றுலா சென்றனர். அனைத்துக் குழந்தைகளும் பல்வேறு விலங்குகளையும் பறவைகளையும் கண்டு இரசித்தனர்.



வண்ணக் கிளியே வீடு எங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.
தூக்கணாங் குருவியே வீடு எங்கே?
தொங்குது மரத்தில் என்வீடு.
கறுப்புக் காகமே வீடு எங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.
பொல்லாப் பாம்பே வீடு எங்கே?
புற்றும் புதருமே என்வீடு.
கடுகடு சிங்கமே வீடு எங்கே?
காட்டுக் குகையே என்வீடு.
நகரும் நத்தையே வீடு எங்கே?
நகருது என்னுடன் என்வீடு.



## உற்று நோக்கிச் சொல்வோம்; எழுதுவோம்.

❖ பாடப்பகுதியிலுள்ள படத்திலிருந்து உயிரினங்களைக் கண்டுபிடித்துக் கூறுங்கள்; எழுதுங்கள்.

## எழுதுங்கள்.

❖ 'ஒ' வில் தொடங்கும் ஒரு விலங்கு

❖ முதல் எழுத்தை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.


ஒட்டகம்


ஓணான்

## கூறுங்கள்.

❖ 'ஒ' வில் தொடங்கும் எத்தனை சொற்களை உங்களால் கூற முடியும்?

❖ 'ஓ' வில் தொடங்கும் எத்தனை சொற்களை உங்களால் கூற முடியும்?

## படத்தைப் பார்த்துப் பெயர் எழுதுங்கள்.

1





9

## வகைப்படுத்துவோம்.

❖ உங்களுக்குத் தெரிந்த உயிரினங்களின் பெயர்களை எழுதுங்கள்.

❖ வாழிடங்களின் அடிப்படையில் அவ்விலங்குகளை வகைப்படுத்துங்கள்.

| புற்று | குகை | புதர் | கூடு | தொழுவம் |
|---|---|---|---|---|
| | | | | |

## வாக்கியத்தில் எழுதுவோம்.

❖ எடுத்துக்காட்டினைப் போல் தொடரமைத்து எழுதுவோம்.

◈ மாடு – தொழுவம் : மாடு தொழுவத்தில் கட்டப்படும்.

◈ கோழி – கூடு : ..............................................

◈ சிலந்தி – வலை : ..............................................

◈ நண்டு – வளை : ..............................................

◈ ஆடு – கொட்டில் : ..............................................

◈ முயல் – புதர் : ..............................................

◈ பாம்பு – புற்று : ..............................................

## விலங்கியல் பூங்காவில்...

விலங்கியல் பூங்காவில் குழந்தைகள் ஒவ்வொன்றாகப் பார்த்து இரசித்தனர். நடந்து நடந்து சோர்ந்து போயினர். இறுதியில் ஒரு கண்ணாடிக் கூண்டைப் பார்த்துச் சட்டென்று நின்றனர்.



கண்ணாடிக் கூண்டிற்குள் பலவிதமான பாம்புகள் இருந்தன.
நல்லபாம்பு படமெடுத்து ஆடியது. குழந்தைகள் பார்த்து இரசித்தனர்.
"உயிரினங்களைச் சீண்டாதீர்" ஆசிரியை அறிவுரை கூறினார்.
விலங்கியல் பூங்காவில் விதவிதமான உயிரினங்கள் இருந்தன.
குழந்தைகள் ஆர்வத்தோடு வேடிக்கை பார்த்தனர்.
பாறைபோல் ஒரு பெரிய ஆமை தலையை உயர்த்திப் பார்த்தது.
கமலாவும் தோழிகளும் கண்டுகளித்தனர்.



## பட வாசிப்பு.

❖ பாடப்பகுதியிலுள்ள படத்தைப் பாருங்கள். அதிலுள்ள உயிரினங்களின் பெயர்களை எழுதுங்கள்.

## தொடர் அமைப்போம்.

❖ தரப்பட்டுள்ள மாதிரியைப் போன்று புதிய தொடர்களை உருவாக்குங்கள்.

| | | |
|---|---|---|
| நான் | | சென்றேன் |
| நீ | | சென்றாய் |
| அவன் | சுற்றுலா | சென்றான் |
| அவள் | | சென்றாள் |
| நாங்கள் | | சென்றோம் |

நான் சுற்றுலா சென்றேன்.

## வட்டமிடுங்கள்.

❖ கீழே தரப்பட்டுள்ள படங்களிலிருந்து ஊர்வன எவை என வட்டமிடுங்கள்; பெயர் எழுதுங்கள்.



## உரையாடுங்கள்.

❖ நீங்கள் விலங்கியல் பூங்கா சென்றதுண்டா?

❖ அங்கு என்னென்ன பார்த்தீர்கள்?

❖ நீங்கள் பாம்பைப் பார்த்ததுண்டா?

❖ பாம்பு எவ்வாறு செல்லும்? செய்து காட்டுங்களேன்.

கதை நேரம்...

# கொக்கும் நரியும்

படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுங்கள்.




கதை சொல்லும் நீதி : பிறரை நீ ஏமாற்றினால் நீயும் ஏமாற்றப்படுவாய்.

மயிலைப் பாரு மயிலைப் பாரு
தோகை விரித்து ஆடுது
மானைப் பாரு மானைப் பாரு
துள்ளித் துள்ளி ஓடுது
பாம்பைப் பாரு பாம்பைப் பாரு
படம் எடுத்து ஆடுது
முயலைப் பாரு முயலைப் பாரு
தத்தித் தாவி ஓடுது
நரியைப் பாரு நரியைப் பாரு
தந்திரங்கள் பண்ணுது
காட்டரசன் சிங்கத்தைக்
கண்டு எல்லாம் பதுங்குது.

அலகு – 7

# நிலவைக் காணவில்லை



## கடற்கரைச் சுற்றுலா

அன்று சௌமியா மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். நல்ல ஆடை அணிந்து மாலையில் பெற்றோருடன் கடற்கரைக்குச் சென்றாள்.

நீல வண்ணக் கடல்....

கடலிலே கப்பல்கள் மிதந்து கொண்டிருந்தன.

கடல் அலை எழுந்து உயர்ந்து ஆர்பரித்தது.

கண்ணுக்கு எட்டும் தூரம் வரை தண்ணீர்.

வானில் சூரியன் தகதகத்தது.

கடற்கரை மணலில் நண்டுகள் ஓடி விளையாடின.

கடல் ஆமைகள் பாறையில் வெயில் காய்ந்தன.

மீன்கள் துள்ளிக் குதித்தன.

கடற்காகங்கள் அங்கும் இங்கும் பறந்தன.

சிறுவர்கள் கடற்கரை மணலில் சிப்பிகளைச் சேகரித்து விளையாடினர்.

சூரியன் மறையத் தொடங்கியது.

நீல வானம் சிவந்தது.

கடல் அலையின் தாலாட்டு எங்கும் ஒலித்தது.



## வாசிப்போம்.

❖ பாடப்பகுதியை வாசித்து அதிலுள்ள உயிரினங்களின் பெயர்களை வட்டமிடுங்கள். எழுதுங்கள்.

## வகைப்படுத்துவோம்.

❖ தரப்பட்டுள்ள உயிரினங்களுக்கு அவற்றின் வாழிடங்களுக்கு வழி காட்டுங்கள்.

- யானை
- மான்
- முதலை
- திமிங்கலம்
- கரடி
- ஆமை
- மீன்





## வினா இரண்டு; விடை ஒன்று.

1. கடல் நீரின் சுவை என்ன?
2. தண்ணீரில் கரையும் பொருள் எது?

## எளிய சோதனை செய்வோம்.

❖ கீழே தரப்பட்டுள்ள பொருட்கள் தண்ணீரில் மூழ்குமா? மிதக்குமா? என்று செய்து பார்த்து எழுதுங்கள்.

- பந்து
- காகித அட்டை
- குண்டூசி
- தட்டு
- பானை
- இலை
- பென்சில்
- வளையல்
- நாணயம்

| மூழ்குபவை | மிதப்பவை |
|---|---|
| | |

## செய்து பாருங்கள்.

❖ இரண்டு கிண்ணத்தில் நிறைய தண்ணீர் எடுங்கள். அதில் ஒரு கிண்ணத்தில் உப்பை நன்றாகக் கலக்கவும். ஒரு முட்டையை எடுங்கள். இரண்டு கிண்ணங்களிலும் போட்டுப் பாருங்கள். என்ன நிகழும்?

**நான் கண்டறிந்தவை**



## நிலாச் சோறு

சௌமியா கடற்கரையில் நின்று காட்சிகளைக் கண்டு களித்தாள். மாலையில் சூரியன் மறையத் தொடங்கியது. சூரியன் கடலுக்குள் மூழ்கியது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நிலவு மெல்ல எட்டிப் பார்த்தது. சௌமியா நிலவைப் பார்த்து கொண்டே நின்றாள்.

வட்ட வட்ட நிலா பார்!
வானில் மிதக்கும் நிலா பார்!
நட்சத்திரங்கள் நடுவிலே
நாளும் தோன்றும் நிலா பார்!

சில தினங்கள் வளருதே!
சில தினங்கள் தேயுதே!
முழு நிலவாய் மாறியே
முகம் காட்டிச் சிரிக்குதே!

அழும் குழந்தை சிரிக்கவே!
அம்மா காட்டும் நிலா பார்!
நிலாச் சோறு தின்னலாம்
நீயும் சேர்ந்து உண்ணவா.



## மெட்டமைப்போம்; பாடுவோம்.

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

## உரையாடுங்கள்.

- நீங்கள் பார்த்த நிலா பற்றிக் கூறுங்கள்.
- வானத்தில் நீங்கள் என்னென்ன பார்த்தீர்கள்?
- முழு நிலவை என்றும் பார்க்க முடியுமா?
- பாடலில் உனக்குப் பிடித்த அடி எது? ஏன்?

## நான் யார்?

வானில் ஒரு பப்படம்
வட்டமான பப்படம்
உடைந்து போகா பப்படம்
வளர்ந்து தேயும் பப்படம்

நான் யார்? ______

## நிலவைப் பார்ப்போம்; வரைவோம்.

- நீங்கள் தினமும் நிலாவை உற்றுக் கவனியுங்கள். நிலாவின் வடிவத்தை வரையுங்கள்.

| நான் கண்ட நிலா | | | | |
|---|---|---|---|---|
| 1  | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | |

## சிறுகுறிப்பு எழுதுவோம்.

பாடப்பகுதியிலுள்ள படத்தை உற்றுக் கவனித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள். விடையைப் பொருத்தமான இடத்தில் எழுதி சிறு குறிப்பை முழுமையாக்குங்கள்.

1. கடலில் மிதந்து செல்வது எது? ______
2. கடலில் நீந்திச் செல்வது எது? ______
3. சௌமியா தன் தம்பிக்கு எதைக் காட்டினாள்? ______
4. கடற்கரை மணலில் ஓடித் திரிவன எவை? ______
5. வானத்தில் மின்னுவன எவை? ______

### சிறு குறிப்பு

இரவு நேரம். வட்ட ______________ வானில் தோன்றியது. ______________ மின்மினிப் பூச்சிகள் போன்று மின்னின. ______________ கடற்கரை மணலில் துள்ளி விளையாடின. கடல் நீரில் ______________ நீந்திக் குளித்தது. ______________ கடலில் மிதந்து சென்றது. சௌமியாவும் பெற்றோரும் கடற்கரை காட்சிகளைக் கண்டு இரசித்தனர்.



## பௌர்ணமி இரவு

கடற்கரையில் நின்று சௌமியா காட்சிகளைக் கண்டு இரசித்தாள். அன்று பௌர்ணமியானதால் இரவு வானம் முழுநிலவுடன் அழகாகக் காட்சியளித்தது. வட்ட நிலா வானில் உலா வந்தது. மேகங்களுக்கிடையே நட்சத்திரங்கள். ஆகா கொள்ளை அழகு!



முழு நிலா வானில் ஒளிர்ந்தது
காற்று வீசியது
மேகம் திரண்டது
நிலா மறைந்தது
நிலா எங்கே?

சௌமியா வருந்தினாள்.
வானில் நட்சத்திரங்கள்
கண் சிமிட்டிச் சிரித்தன.
மின் மினிப் பூச்சிகளாய்
நட்சத்திரங்கள் மின்னின.

காற்று நின்றது
மேகம் விலகியது
அழகுநிலா மீண்டும் தோன்றியது
சௌமியா மகிழ்ந்தாள்
கைதட்டிச் சிரித்தாள்.

## இரவு வானம்.

❖ பௌர்ணமி அன்று இரவு வானத்தில் நீங்கள் காண்பது என்னென்ன? எழுதுங்கள்.

## வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.

முழுநிலா வானில் ஒளிர்ந்தது
இன்று பௌர்ணமி நாள்

'பௌர்ணமி' என்ற சொல்லை வட்டமிடுங்கள். எழுதுங்கள்.

## முதல் எழுத்தை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்; எழுதுங்கள்.

- பௌ ர் ண மி
- சௌ மி யா
- மௌ ன ம்
- கௌ த மி
- ஔ வை யா ர்

## விடுகதைக்கு விடை எழுதுங்கள்.

1. நீலப் பட்டுப் பாயில் வைரச் சிதறல்கள்.
2. அழகான பெண்ணுக்கு அதிசயமான நோய், பாதிநாள் தேய்வாள், பாதிநாள் வளர்வாள்.
3. வெள்ளம் வெள்ளமாகக் கறுப்பன் கண்ணீர் விட்டானாம்.
4. உருவம் இல்லாத ஒருவன், உலகெங்கும் உலவித் திரிவான்.

## குறிப்பு எழுதுங்கள்.

❖ சொற்சூரியனை நிரப்புங்கள்; அதனடிப்படையில் குறிப்பு எழுதுங்கள்.




**வானம்**

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

## சொல் ஒன்று; பொருள் இரண்டு.

1. சூரியன் மறைவது
   மலர்கள் ஒன்று சேர்வது → [ ]

2. சூரியனின் மறு பெயர்
   வாரத்தின் முதல் நாள் → [ ]

3. நிலாவின் மறுபெயர்
   வாரத்தின் இரண்டாம் நாள் → [ ]

கதை நேரம்...

# நரியும் திராட்சையும்

படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுங்கள்.




கதை சொல்லும் நீதி : ஒற்றுமையாக இருந்தால் வெற்றி பெறலாம்.

நிலா நிலா ஓடி வா!

நில்லாமல் ஓடி வா!

மலை மீது ஏறி வா!

மல்லிகைப் பூ கொண்டு வா!

வட்ட வட்ட நிலாவே!

வண்ண முகில் பூவே!

பட்டம் போலப் பறந்து வா!

பம்பரமாய் சுற்றி வா!



அலகு – 8

# வானவில்லின் விந்தை



## வா.. மழையே... வா...

காகிதக் கப்பல்கள் செய்துவைத்து மழைக்காகக் காத்திருந்தாள் மீனா. அவள் தனது பாட்டியிடம் இன்று மழை வருமா பாட்டி? என்று கேட்டாள். அப்போது வானம் கருத்தது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. இன்று மழை வரும் என்றாள் பாட்டி.

மழைத் துளிகள் விழ ஆரம்பித்தது.
மீனா மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள்.

கத்திக் கப்பல் செய்து வைத்தேன்
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்
வா மழையே வா...
வா மழையே வா...

சின்னச் செடியை நட்டு வைத்தேன்
செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்.
வா மழையே வா...
வா மழையே வா...

வீதிப் பக்கம் வந்து நின்றேன்
மேலே மேலே பார்த்து நின்றேன்
வா மழையே வா...
வா மழையே வா...

– குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா



## மெட்டமைப்போம்; பாடுவோம்.

❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

## எது? ஏன்?

❖ பாடலில் உனக்குப் பிடித்த வரி எது? ஏன்?

## விடுகதைக்குச் சரியான விடையை எடுத்து எழுதுங்கள்.

1. அள்ள முடியும்; ஆனால் கிள்ள முடியாது.
2. கண்ணுக்குத் தெரியாதவன் ;
   உயிருக்கு உகந்தவன்
3. உலர்ந்த கொம்பிலே விரிந்த பூ
4. உலகுக்கெல்லாம் ஒரு துப்பட்டி
5. கண்சிமிட்டும் ஒன்று ;
   மணி அடிக்கும் மற்றொன்று ;
   கண்ணீர் வடிக்கும் இன்னொன்று.

[குடை, வானம், காற்று, தண்ணீர், மின்னல் – இடி – மேகம்]

## பொருத்தமான சொல்லை எடுத்து எழுதி வாசியுங்கள்.

மேகம் கருத்தது

.................... மின்னியது

.................... இடித்தது

.................... பெய்தது

செடி நனைந்தது

.................... நனைந்தது

.................... நிறைந்தது

குளம்

இடி

மழை

மின்னல்

குடை

## உற்றுக் கவனிப்போம் ; எழுதுவோம்.

- பாடப்பகுதியிலுள்ள படத்தை உற்றுக் கவனியுங்கள். காட்சிகளைத் தொடர்ந்து எழுதுங்கள்.

### மழைக்காட்சிகள்

மீனாவும் அவளது பாட்டியும் திண்ணையில் அமர்ந்தனர்.

வேடிக்கை பார்த்தனர். அப்போது திடீரென...

காற்று வீசியது, இடி இடித்தது, ______________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

மீனா கை கொட்டிச் சிரித்தாள்.

## வண்ணம் தீட்டுவோம் ; பெயர் எழுதுவோம்.





## வானவில் சிரித்தது...

மழை நின்றது. மீனா முற்றத்தில் ஓடும் நீரில் கப்பல் விட்டுக் கொண்டிருந்தாள். அப்போது வெயிலும் வந்தது. 'ஆகா!... மழையும் வெயிலும்', மீனா தனது பாட்டியிடம் ஓடினாள். "பாட்டி மழையும் வெயிலும் ஒன்றாக வந்துள்ளனவே. ஏன் பாட்டி?" என்று கேட்டாள். பாட்டி அவளுக்கு ஒரு கதை கூறினார்.



"மக்களுக்கு என்னை மிகவும் பிடிக்கும்" வெயில் சொன்னது.
"இல்லை இல்லை என்னைத்தான் பிடிக்கும்" மழை சொன்னது.
போட்டிக்கு மழையும் வெயிலும் சவால் விட்டன.
போட்டி ஆரம்பித்தது. சடசடவென மழை பெய்தது.
மக்கள் காயப்போட்டிருந்த ஆடைகள் நனைந்தன.
தானியங்கள் நனைந்து சேதமாகின.
மக்கள் மழையைத் திட்டினர்.
"இனி வரமாட்டேன்" என்று மழை கோபப்பட்டுச் சென்றது.
நாட்கள் கழிந்தன. செடிகள் கருகின. குடிக்க தண்ணீர் இல்லை.
மக்கள் வருந்தினர். மழையை அழைத்தனர்.
மழை இரக்கப்பட்டுப் பெய்ய ஆரம்பித்தது.
சற்று நேரத்தில் வெயில் வந்தது.
"உன்னை மக்களுக்கு மிகவும் பிடிக்கும்" என்றது வெயில்.
"உன்னையும் தான்" என்றது மழை.
இருவரும் நண்பர்கள் ஆயினர்.
அப்போது வானவில் சிரித்தது.



**உரையாடுங்கள்.**

- ஊரில் மழையே பெய்யவில்லை என்றால் என்ன நிகழும்?
- அடை மழை தொடர்ந்து பெய்தால் என்ன நிகழும்?

**எப்படியிருக்கும்?**

- மழை மற்றும் வெயிலின்போது வானமும் சுற்றுப்புறமும் எப்படியிருக்கும்? உற்றுக் கவனித்துக் கூறுங்கள்.

| மழையின்போது | வெயிலின்போது |
|---|---|
| » | » |
| » | » |
| » | » |
| » | » |
| » | » |

**பாடுங்கள் பார்ப்போம்.**

வானவில் பார்த்தேனே!

வண்ணம் கண்டு வியந்தேனே!

எண்ணி எண்ணிப் பார்த்தேனே!

ஏழு நிறங்கள் கண்டேனே!

மீண்டும் எண்ணிப் பார்த்தேனே!

மேகம் வந்து மறைத்ததே!

- பாடலில் 'எண்ணி' என்ற சொல் எத்தனை முறை வந்துள்ளது?
- வானவில்லில் உள்ள நிறங்கள் எத்தனை?

**எத்தனை சொற்கள்.**

- 'எ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |

- 'ஏ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |

**தரப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திப் பாடலை முழுமைப்படுத்துங்கள்.**

மழையே மழையே வா மழையே
மின்னல் மின்னிட வா மழையே
மழையே மழையே வா மழையே
________________ வா மழையே
________________________
________________________
________________________
________________________
________________________
________________________
________________________
மக்கள் வாழ்ந்திட வா மழையே

(இடியும் இடித்திட, மரமும் நனைந்திட,
மண்ணை நனைத்திட, குளத்தை நிறைத்திட)

அன்று மழை பெய்ததால் இரவில் நல்ல குளிர். அம்மா போர்த்தி விட்ட கம்பளிப் போர்வைக்குள் சுருண்டு படுத்துக்கொண்டாள் மீனா. கதகதப்பு மெல்ல உடலெங்கும் பரவியது. கண்களை மூடி உறங்கினாள். அப்போது யாரோ அழைப்பது அவள் காதில் விழுந்தது.



மீனா... மீனா....

மீனா சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

"இங்கே பார். நான்தான் கம்பளி பேசுகிறேன்."

"நீயா பேசுகிறாய்?" மீனா ஆச்சரியத்துடன் கம்பளியைப் பார்த்துக் கேட்டாள்.

"எனக்கு உன்மேல் கோபம்" என்றது கம்பளி.

"ஏன்?" என்றாள் மீனா.

"இவ்வளவு நாள் நான் அலமாரியில் மூச்சுத் திணறி இருந்தேன்.

நீ என்னைத் திரும்பிப் பார்த்ததே இல்லை" கம்பளி சொன்னது.

"நீ எப்பொழுதும் தேவைப்படமாட்டாய் அல்லவா? அதனால் தான்

உன்னைப் பத்திரமாக வைத்திருந்தேன்," மீனா கூறினாள்.

"மற்ற ஆடைகளை மாற்றி மாற்றி அணிகிறாய். என்னை மட்டும் இப்போது தானே எடுத்தாய்" கம்பளி கேட்டது.

"அய்யோ... என் செல்லக் கம்பளியே....... குளிர்காலம் வரும்போது உன்னைப் போர்த்திக்கொள்ளவே பத்திரமாக வைக்கிறோம். புரியவில்லையா உனக்கு?"

"நிசமாவா... நீ என்னைக் கவனிக்கவே இல்லை என்று கவலைப்பட்டேன்."

நீ இல்லாமல் குளிர்காலத்தில் வாழ முடியுமா?

நீ தானே எங்கள் உயிர். என்றாள் மீனா.

கம்பளி மிக மகிழ்ச்சியுடன் மீனாவை அணைத்துக் கொண்டது.



## யார் யாரிடம் கூறியது? கண்டுபிடியுங்கள்.

- "நீ இல்லாமல் குளிர்காலத்தில் வாழ முடியுமா? நீ தானே எங்கள் உயிர்."

  - கூறியது யார்? ______
  - யாரிடம் கூறினார்? ______

## பொருத்தமானவற்றை இணையுங்கள்.

| | |
|---|---|
| மழை | தொப்பி |
| குளிர் | கம்பளி |
| வெயில் | விசிறி |
| | குடை |
| | மழை அங்கி |
| | நெருப்பு |

## இணை எது? பொருத்துங்கள்.

* பட்டு ஆடை
* கம்பளி ஆடை
* பருத்தி ஆடை







## நடித்துக் காட்டுங்கள்.

» குளிர் அடித்தல்

» மழையில் நனைதல்

» வெயிலில் நடத்தல்

## சிறு குறிப்பு எழுதுவோம்.

| குல்லா | குடை |
| --- | --- |
| என் பெயர் குல்லா<br>நான் பல வண்ணங்களில்<br>காணப்படுவேன்.<br>நான் பல வடிவங்களில்<br>காணப்படுவேன்.<br>மழைக்கும் பயன்படுவேன்.<br>வெயிலுக்கும் பயன்படுவேன்.<br>என்னை எல்லோருக்கும் பிடிக்கும். | என் பெயர் ____________<br>______________________________<br>______________________________<br>______________________________<br>______________________________<br>______________________________<br>______________________________<br>______________________________ |

## சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குளிர்காலத்தில் பயன்படுவேன். (குடை, கம்பளி)

   [ ]

2. வெயில்காலத்தில் பயன்படுவேன். (விசிறி, மழை அங்கி)

   [ ]

3. மழைக்காலத்தில் பயன்படுவேன். (மின்விசிறி, குடை)

   [ ]

4. பகலில் காண்பது. (சூரியன், நட்சத்திரம்)

   [ ]

5. இரவில் காண்பது. (சூரியன், நிலா)

   [ ]

கதை நேரம்...

## கொக்கும் ஆமையும்

படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுங்கள்.



கதை சொல்லும் நீதி : சிந்தித்துச் செயல்படு. இல்லையேல் ஆபத்து.

கை வீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
கண்ணால் பார்க்கலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய் போடலாம் கைவீசு
பொம்மை வாங்கலாம் கைவீசு
பொட்டு வைக்கலாம் கைவீசு
வேடிக்கை பார்க்கலாம் கைவீசு
விளையாடப் போகலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு.

– குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா

## எழுதுங்கள் பார்ப்போம்

பார் பார்
தரையின் மேலே
பானை பார்
பானை மேலே
செடியைப் பார்

______________________
______________________
______________________
______________________

வண்டின் மேலே
வண்ணம் பார்
வண்டின் அழகை
நீயும் பார்



அலகு – 9

# மண்வாசனை

## களத்து மேட்டிலே...

ஆதவன் தனது தாத்தாவுடன் நெல் வயலுக்குச் சென்றான். பட்டணத்திலிருந்து கிராமத்திற்கு வந்த அவனுக்கு அங்குள்ள காட்சிகள் கண்ணுக்கு விருந்தாக அமைந்தன. அனைத்தையும் வியப்புடன் இரசித்தான்.



பரந்து விரிந்த வயல்வெளிகள்.
சிலு சிலு என்று தென்றல் வீசியது.
வயலில் உழவர்கள் கலப்பையால் உழுகின்றனர்.
முற்றிய கதிர்களை அறுத்துக் குவிக்கின்றனர் சிலர்.
தெம்மாங்குப் பாடல்களோடு வயல்வெளி வேலைகள்
கலகலப்பாக நடைபெறுகின்றன.
ஆகா… மயில். ஆதவன் மயிலருகே ஓடினான்.
நெல்மணிகளைக் கொத்தித் தின்று கொண்டிருந்த
மயில் திரும்பிப் பார்த்தது.
சிட்டுக் குருவிகள் பறந்தன.
மேகம் லேசாகக் கருத்தது.
மயில் தோகையை விரித்து அழகாக ஆடியது.
ஆதவன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.



**உரையாடுங்கள்.**

- நீங்கள் வயலுக்குச் சென்றதுண்டா?
- அங்கு என்னென்ன பார்த்தீர்கள்?
- யார் யார் என்னென்ன செய்தார்கள்?

**வேலைகளை வரிசைப்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| களை பறித்தல் | நிலம் உழுதல் |
| நீர்ப் பாய்ச்சுதல் | கதிர் அறுத்தல் |
| நாற்று நடுதல் | உரம் இடுதல் |

1. ...........................................................
2. ...........................................................
3. ...........................................................
4. ...........................................................
5. ...........................................................
6. ...........................................................








## என்னென்ன கருவிகள்?












விவசாயத்திற்குப் பயன்படுத்தும் பொருட்களை எழுதுங்கள்.



## வாழ்த்துவோம்... வணங்குவோம்!

ஆதவனுக்கு நகரத்தில் காணாத பல்வேறு தொழில்களைத் தாத்தா காண்பித்துக் கொடுத்தார். ஒவ்வொரு தொழிலின் மேன்மைகளைப் பற்றி அவனுக்குச் சொல்லியும் கொடுத்தார்.



குயவர் செய்த பானையிலே
குளிர்ந்த நீரைப் பருகலாம்.
சிற்பி செதுக்கிய சிலையினிலே
அழகைக் கண்டு இரசிக்கலாம்.

தச்சர் செய்த ஊஞ்சலிலே
தந்தனத்தோம் ஆடலாம்.
நெசவாளர் நெய்த ஆடையிலே
இன்ப உலா போகலாம்.

கொல்லர் செய்த கலப்பையாலே
உழவு நாமும் செய்யலாம்.
ஊருக்கெல்லாம் உணவளிக்கும்
உழவர்களை நாமும் வணங்கலாம்.



## பாடலுக்கு மெட்டமைப்போம்

❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

## இணைத்து எழுதுவோம்

❖ பாடலிலிருந்து கண்டுபிடித்து இணைத்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| குயவர் | – | உணவு |
| தச்சர் | – | பானை |
| நெசவாளர் | – | சிலை |
| சிற்பி | – | கருவி |
| கொல்லர் | – | ஆடை |
| உழவர் | – | ஊஞ்சல் |

## என்னென்ன தொழில்கள்?









**படங்களைப் பார்த்துத் தொழில்களின் பெயர்களை எழுதுங்கள்.**

.................................... .................................... ....................................

.................................... .................................... ....................................

## பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் | நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பார் |
| 2. | மருத்துவர் | நமது வீட்டிற்குப் பாலைக் கொண்டு வருவார் |
| 3. | காவலர் | நமது பள்ளியில் பாடம் கற்பிக்கிறார் |
| 4. | தபால்காரர் | திருடர்களைப் பிடிப்பார் |
| 5. | பால்காரர் | கடிதங்களைக் கொண்டு வருவார் |

## பாடி மகிழ...

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாரு உள்ளார்?
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இனி இல்லை
ஐயம் இன்றி சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அஃதே எனக்கு வழியாம்

## நாட்டின் சொத்து

ஆதவன் தாத்தாவுடன் கிராமத்தின் அழகைக் கண்டு இரசித்தான். நடந்து செல்லும் வழியில் அவன் தாத்தாவிடம் துறுதுறுவெனக் கேள்வி கேட்டுக் கொண்டே நடந்தான். தாத்தாவும் அவன் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே நடந்தார்.



| | | |
|---|---|---|
| ஆதவன் | : | தாத்தா.. உங்களுக்கு என்னென்ன வேலைகள் தெரியும்? |
| தாத்தா | : | விவசாயம் செய்வதே எனது முக்கிய வேலை. |
| ஆதவன் | : | என் அப்பா ஏன் விவசாயம் செய்யவில்லை? |
| தாத்தா | : | அவர் மருத்துவர் ஆகி விட்டாரே! |
| ஆதவன் | : | என் அம்மா ஏன் விவசாயம் செய்யவில்லை? |
| தாத்தா | : | அவர் ஆசிரியை ஆகி விட்டாரே! |
| ஆதவன் | : | தாத்தா..... விவசாயம் செய்யப் படிக்க வேண்டுமா? |
| தாத்தா | : | ஆமாம்.. இப்போ அதுக்கும் நிறைய படிப்புகள் இருக்கின்றன. |
| ஆதவன் | : | அப்போ நானும் படித்து நல்ல விவசாயி ஆகிவிடுவேன். |
| தாத்தா | : | அப்படியா.. என் செல்லம்... சமத்து. நீ தானே நாட்டின் சொத்து. |



**தரப்பட்டுள்ள சொற்களை அகர வரிசைப்படி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| இலை | ஆடு | ஒட்டகம் | ஓணம் |
| அம்மா | ஈசல் | ஔவையார் | ஐந்து |
| ஊஞ்சல் | ஏணி | உரல் | எலி |

................................ ................................ ................................ ................................

................................ ................................ ................................ ................................

................................ ................................ ................................ ................................

**வரிசைப்படுத்திய சொற்களிலிருந்து முதல் எழுத்துகளை மட்டும் எடுத்து எழுதுக.**

# வேடனும் புறாவும்

படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுங்கள்.




கதை சொல்லும் நீதி : ஒற்றுமையே பலம்

# தமிழ் எழுத்துகள் அட்டவணை

## உயிர் எழுத்துகள் 12

ஆய்த எழுத்து 1

மெய்யெழுத்துகள் 18

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

உயிர்மெய் எழுத்துகள் 216

உயிர்மெய் எழுத்துகள் 216

தமிழில் மொத்த எழுத்துக்கள் 12 + 18 + 216 + 1 = 247

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ **பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச – கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்–1098, கிரைம் ஸ்டோப்பர்–1090, நிர்பயா–1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் – 0471–324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***